THE HINDU - ENGLISH
Dated: 07.05.2024

# Amid row over fake video, EC warns parties against misuse of AI-based tools

**The Hindu Bureau**
NEW DELHI

Amid the row over the doctored video of Union Home Minister Amit Shah, the Election Commission of India on Monday issued directions to political parties on responsible and ethical use of social media in the campaign. The poll body asked them to remove fake content within three hours of it coming to their notice.

In an advisory to parties, the EC warned against misuse of AI-based tools to create deepfakes that distort information or propagate misinformation, emphasising the need to uphold the integrity of the electoral process.

In the doctored video, Mr. Shah is heard saying the BJP government would scrap quotas for Dalits, tribals and OBCs.

In a statement here, the EC said it has brought to the notice of political parties, the existing legal provisions that govern the regulatory framework against the use of misinformation and impersonation using deepfakes. This includes the Information Technology Act, 2000 and the Information Technology (Intermediary Guidelines and Digital Media Ethics Code) Rules, 2021, the Indian Penal Code, and framework of the twin acts namely the Representation of the People Act, 1950 and 1951, and the provisions of the Model Code of Conduct.

**EC has emphasised the need to uphold the integrity of the electoral process**

In view of these existing legal provisions, among other directions, the parties have been specifically directed to refrain from publishing and circulating deepfake audios or videos; disseminating any misinformation or information which is patently false, untrue or misleading in nature; posting derogatory content towards women; using children in campaigns; and depicting violence or harm to animals.

The parties have been directed to promptly remove any such content within three hours of bringing it to their notice, warn the person responsible in their party, report unlawful information and fake user accounts to respective platforms, and escalate persistent issues to the Grievance Appellate Committee under Rule 3A of the Information Technology (Intermediary Guidelines and Digital Media Ethics Code) Rules, 2021.

THE HINDU - ENGLISH

Dated: 07. 05. 2024

# Stage set for third phase of polling for 93 seats today

Sreeparna Chakrabarty
NEW DELHI

A total of 93 Lok Sabha constituencies in 12 States will vote in the third phase of the Lok Sabha election on Tuesday.

Initially, the Election Commission had announced 94 seats for polling in the third phase. Later, polls in Betul were postponed to May 7, making it 95 constituencies.

However, soon thereafter, the election to the Anantnag-Rajouri seat was deferred to May 25 and Surat, where voting was supposed to take place on May 7, elected a BJP candidate unopposed, thus reducing the number of seats going to the polls to 93 in the third phase.


In the fray are over 1,300 candidates, including around 120 women. Over 11 crore people are eligible to vote in this phase.

The constituencies where voting would be held include 25 seats in Gujarat, 11 in Maharashtra, 10 in Uttar Pradesh, 14 in Karnataka, seven in Chhattisgarh, five in Bihar, four each in Assam and West Bengal and all two in Goa.

The star candidates include Union Home Minister Amit Shah, Civil Aviation Minister Jyotiraditya Scindia, Health Minister Mansukh Mandaviya and former Madhya Pradesh Chief Ministers Shivraj Singh Chouhan and Digvijaya Singh.


Also on the table is the battle between veteran NCP leader Sharad Pawar's daughter Supriya Sule and Sunetra Pawar, wife of Mr. Pawar's estranged nephew and Maharashtra Deputy Chief Minister Ajit Pawar, from the family pocket borough of Baramati in Maharashtra.

**CONTINUED ON**
**» PAGE 8**



**Poll heat:** Election officials leave to a polling booth at Lal Parade Ground in Bhopal on Monday. A.M. FARUQUI

THE HINDU Dated: 07.05.2024



EVMs to be used in a remote island town in Kamrup, Assam, being loaded in a country boat on the banks of the Brahmaputra. RITU RAJ KONWAR

In Uttar Pradesh, Samajwadi Party chief Akhilesh Yadav's wife Dimple Yadav is fighting to retain the Mainpuri Lok Sabha seat.

May 7 will also decide the fate of former Karnataka Chief Minister Basavaraj Bommai.

Both Prime Minister Narendra Modi and Union Home Minister Amit Shah will cast their vote in Ahmedabad city under the Gandhinagar Lok Sabha seat.

In 2019, the BJP won 72 of the 93 seats while the Congress won just five. In Karnataka, the BJP had swept all 14 seats, defeating the Congress and the JD(S), which were in alliance and ruling the State then.

However, this time, the BJP is wary of a sexual assault case involving its Karnataka ally JD(S)' candidate Prajwal Revanna.

After this phase, voting will be completed in 283 out of 543 seats in the Lok Sabha. The next four phases will be on May 13, May 20, May 25 and June 1. The counting of votes is on June 4.

DECCAN CHRONICLE Dated: 07.05.2024

# EC warns poll picks of misuse of social media

DC CORRESPONDENT
NEW DELHI, MAY 6

Taking cognizance of the certain violations of Model Code of Conduct (MCC), the Election Commission has directed political parties and their candidates to make "responsible and ethical use" of social media platforms, and remove "fake" content within three hours of coming to their notice.

The poll body has warned parties against misuse of AI-based tools to create deep fakes, pressing to uphold the integrity of the electoral process.

The directive comes days after the Delhi police arrested a Congress member in connection with a deep fake and a morphed video case involving Union home minister Amit Shah.

The Election Commission said it has been repeatedly directing the political parties and their leaders and candidates to maintain decorum and utmost restraint in public campaigning.

இந்து தமிழ் திசை

7 MAY 2024

3-வது கட்ட மக்களவைத் தேர்தல்

# 93 தொகுதிகளில் இன்று வாக்குப் பதிவு

● புதுடெல்லி

3-ம் கட்ட மக்களவைத் தேர்தலில் 93 தொகுதிகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெறு கிறது.

நாடு முழுவதும் மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடத்தப் படுகிறது. கடந்த ஏப்ரல் 19-ம் தேதி நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் 102 தொகுதிகள், ஏப்ரல் 26-ம் தேதி நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலில் 88 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது.

மூன்றாவது கட்டத்தில் 94 தொகு திகளுக்கு தேர்தல் நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் ஆணை யம் அறிவித்திருந்தது. இதனி டையே இரண்டாவது கட்ட தேர்தலில் மத்திய பிரதேசத்தின் பேதுல் தொகுதி பகுஜன் சமாஜ் வேட்பாளர் அசோக் பலாவி உயிரி ழந்ததால் அந்த தொகுதிக்கான தேர்தல் 3-வது கட்டத்துக்கு தள்ளி வைக்கப்பட்டது. இதன்படி 3-வது கட்டத்தில் ஒரு தொகுதி அதிகரித்து 95 மக்களவைத் தொகுதிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டது.

குஜராத்தில் சூரத் மக்களவைத் தொகுதியில் பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். எனவே 3-வது கட்டத்தில் அந்த தொகுதிக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. மோசமான வானிலை காரணமாக 3-வது கட்டத்தில் தேர்தல் நடைபெற வேண்டிய ஜம்மு-காஷ்மீரின் அனந்தநாக்-ரஜோரி மக்களவைத் தொகுதிக்கான வாக்குப்பதிவு மே 25-ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக 3-வது கட்டத்தில் 93 மக்களவைத் தொகுதிகளுக்கு இன்று தேர்தல் நடக்கிறது.

இதன்படி அசாமில் 4, பிஹாரில் 5, சத்தீஸ்கரில் 7, டையூ-டாமனில் 2, கோவாவில் 2, குஜராத்தில் 25, கர்நாடகாவில் 14, மத்திய பிரதேசத்தில் 9, மகாராஷ்டிராவில் 11, உத்தர பிரதேசத்தில் 10, மேற்குவங்கத்தில் 4 தொகுதிகளில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்குகிறது.

மூன்றாவது கட்டத்தில் மொத் தம் 1,352 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் 1,229 பேர் ஆண் கள். 123 பேர் பெண்கள் ஆவர்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குஜராத்தின் காந்தி நகர் தொகுதியில் 2-வது முறையாக போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் சோனல் படேல் களமிறங்கி உள்ளார்.

சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவின் மனைவி டிம்பிள், உத்தர. பிரதேசத்தின் மெயின்புரி தொகுதியில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பாஜக சார்பில் ஜெய்வீர் சிங் களம் காண்கிறார்.

மத்திய அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான ஜோதிர் ஆதித்ய சிந்தியா மத்திய பிரதேசத்தின் குணா மக்களவைத் தொகுதியில் போட்டியிடுகிறார். மத்திய பிரதேச முன்னாள் முதல்வரும் பாஜக மூத்த தலைவருமான சிவ்ராஜ் சிங் சவுகான் விதிஷா மக்களவைத் தொகுதியில் போட்டியிடுகிறார். தேசியவாத காங்கிரஸ் (சரத் சந்திர பவார்) கட்சியின் சார்பில் சரத் பவாரின் மகள் சுப்ரியா சுலே மகாராஷ்டிராவின் பாராமதி தொகுதியில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து தேசியவாத காங்கிரஸ் சார்பில் மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவாரின் மனைவி சுனித்ரா பவார் போட்டியிடு கிறார். மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, கர்நாடகாவின் தார்வாட் தொகுதியில் 5-வது முறையாக போட்டியிடுகிறார். அந்த தொகுதி யில் காங்கிரஸ் சார்பில் வினோத் களத்தில் உள்ளார்.

3rd Phase elections for 12 States starts today, ECI instruct DEOs to Ensure Strong security.

தினத்தந்தி

- 7 MAY 2024



அசாமின் கவுகாத்தியில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுடன் வாக்குச்சாவடிகளுக்கு செல்லும் தேர்தல் பணியாளர்களை படத்தில் காணலாம்.

## நாடாளுமன்ற 3-வது கட்ட தேர்தல்:

# 93 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

புதுடெல்லி, மே.7-

நாடாளுமன்ற 3-வது கட்ட தேர்தல் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. இதில் 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 93 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

### 93 தொகுதிகள்

நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடந்து வருகிறது. இதில் முதல்கட்ட தேர்தல் கடந்த மாதம் 19-ந் தேதியும், 2-வது கட்ட தேர்தல் 26-ந்தேதியும் நடந்தது. இரு கட்டங்களிலுமாக 190 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்து உள்ளது.

அடுத்ததாக 3-வது கட்ட தேர்தல் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. இதில் 93 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

அதன்படி குஜராத் (25 தொகுதிகள்), கர்நாடகா (14), மராட்டியம் (11), உத்தரபிரதேசம் (10), மத்திய பிரதேசம் (9), சத்தீஷ்கார் (7), பீகார் (5), அசாம் (4), மேற்கு வங்காளம் (4), கோவா (2), தத்ரா-ஹவேலி-டையூ-டாமன் (2) என 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 3-வது கட்ட தேர்தல் நடைபெறுகிறது.

குஜராத்தின் சூரத் தொகுதிக்கும் இன்று வாக்குப்பதிவு நடை

பட்டு உள்ளன.

அவற்றில் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பின் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கு அடுத்த மாதம் (ஜூன்) 4-ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

### வாக்கு சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை

நாடாளுமன்ற முதல் 2 கட்ட தேர்தல்களும் பெரும்பாலும் அமைதியாக நடந்து முடிந்தன. அதைப்போல இன்றைய வாக்குப்பதிவையும் அமைதியாக நடத்தி முடிக்க தேர்தல் கமிஷன் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மேலும் கடந்த 2 கட்ட தேர்தலிலும் வாக்குப்பதிவு சதவீதம் சரிந்ததால், இன்றைய தேர்தலில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்து உள்ளது.

இதைப்போல சுமுக வாக்குப்பதிவை நடத்துவதற்கான பணிகளையும் தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. இன்றைய தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு எந்திரங்கள் நேற்றே அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### அமித்ஷா, பசவராஜ் பொம்மை

3-வது கட்ட தேர்தலில் ஏராளமான முக்கிய வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் மத்திய மந்திரிகள் அமித்ஷா, மன்சுக் மாண்டவியா, பர்சோத்தம் ரூபாலா, ஜோதிர் ஆதித்ய சிந்தியா, பிரகலாத் ஜோஷி, முன்னாள் முதல்-மந்திரிகள் திக்விஜய் சிங், சிவராஜ் சிங் சவுகான், பசவராஜ் பொம்மை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இதைப்போல சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ் யாதவின் மனைவி டிம்பிள், சரத்பவாரின் மகள் சுப்ரியா சுலே, அஜித் பவாரின் மனைவி சுனேத்ரா பவார் ஆகியோரின் அரசியல் எதிர்காலமும் இன்று நிர்ணயிக்கப்படுகிறது.

இன்றைய தேர்தலுக்காக அந்தந்த மாநில போலீசாருடன் துணை ராணுவமும் பாதுகாப்பு பணிக்காக களமிறக்கப்பட்டு உள்ளது. இதனால் வாக்குச்சாவடிகளில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

News regarding 3rd phase election in 12 States.

தினமலர்
7 MAY 2024

# கவுன்டிங் சென்டர் கேமரா ரிப்பேர் ஆய்வு பணியில் அதிகாரிகள் குழு

**சென்னை, மே 7–**

ஓட்டு எண்ணும் மையங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களை, அதிகாரிகள் குழு ஆய்வு செய்து, அவை பழுதின்றி செயல்பட, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழகத்தில், லோக் சபா தேர்தல் ஓட்டுகள், 39 மையங்களில் எண்ணப்பட உள்ளன. மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் சீலிடப்பட்டு, அறைக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு பூட்டி சீலிடப்பட்டுள்ளன.

ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டடத்தில், மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் அலுவலர்கள், 24 மணி நேரமும் பாதுகாப்பில் உள்ளனர். அறை உள்ளேயும், வெளியிலும், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுகிறது.

இந்நிலையில், நீலகிரி, ஈரோடு, தென்காசி, விழுப்புரம் என, அடுத்தடுத்து மாவட்டங்களில் ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் உள்ள கட்டடத்தில், கண்காணிப்பு கேமராக்கள் செயல் இழந்தது, கடும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

கண்காணிப்பு கேமராக்கள் செயலிழந்ததற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு வழங்கியதில் ஏற்பட்ட குளறுபடியும் காரணம் என்று கூறப்படுகிறது.

இது குறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு கூறியதாவது:

ஒரு சில பகுதிகளில் கண்காணிப்பு கேமரா பழுதடைந்ததாக புகார் எழுந்துள்ளது. இதற்கு சில தொழில்நுட்ப பிரச்னை காரணம் என்று கூறப்படுகிறது.

இப்புகார் வந்ததும், அனைத்து மாவட்டங்களிலும், மின் துறை, பொதுப்பணி துறையின் எலக்ட்ரிக்கல் பிரிவு அதிகாரிகள் கொண்ட குழு அமைத்து, கண்காணிப்பு கேமராக்கள் முறையாக செயல்படுகிறதா என, ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவில், கண்காணிப்பு கேமராக்கள் பழுதின்றி செயல்பட, தேவையான நடவடிக்கைகள் எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒயர்கள் பழுதடைந்திருந்தால், அதை மாற்ற வேண்டும். கூடுதலாக ஜெனரேட்டர், யு.பி.எஸ்., தேவைப்பட்டால், அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என, மாவட்ட கலெக்டர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

A Special Team to cross check cctv camera & take action to work of cctv camera without any interruption

தினமலர்

- 7 MAY 2024

# 268 மேஜைகளில் ஓட்டு கணக்கீடு

சென்னை, மே 7–

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில், மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது:

ஓட்டு எண்ணும் மையங்களில், ஓட்டு எண்ணிக்கையின்போது 334 நுண் பார்வையாளர்கள், 318 கண்காணிப்பாளர்கள், 325 உதவியாளர்கள், 269 அலுவலக உதவியாளர்கள் என, 1,246 பேர் பணியாற்ற உள்ளனர்.

அதன்படி, வடசென்னை மற்றும் மத்திய சென்னை ஓட்டு எண்ணிக்கையை கணக்கிட தலா 84 டேபிள்கள்; தென்சென்னையில் 100 டேபிள்கள் என, 268 டேபிள்கள் போடப்படும்.

ஓட்டு எண்ணிக்கையில் பணியாற்றுவோர், கணினி குலுக்கல் முறையில், 28ம் தேதியும், இரண்டாம் கட்டமாக, ஜூன் 3, 4ம் தேதி அதிகாலை 5:00 மணியளவிலும், தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெறும். ஓட்டு எண்ணும் மையங்களில், 584 கேமராக்கள் வாயிலாக கண்காணிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

DEO, chennai informs that 268 Tables are going to use at counting centers in chennai

தினமலர்
7 MAY 2024

# ரூ.4 கோடி பறிமுதல் விவகாரம் சிக்கப்போகும் புள்ளிகள் யார்?

– நமது நிருபர் –

கடந்த ஏப்ரல், 4ல், சென்னை – திருநெல்வேலி நெல்லை எக்ஸ்பிரசில் கொண்டு செல்லப்பட்ட நான்கு கோடி ரூபாயை தாம்பரம் போலீசாரும், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளும் பறிமுதல் செய்தனர். பணத்தை எடுத்து சென்ற சதீஷ், நவீன், பெருமாள் ஆகியோர் பிடிபட்டனர்.

இவர்கள் நெல்லை பா.ஜ., வேட்பாளர் நயினார் நாகேந்திரனோடு தொடர்புடையவர்கள் என்பதால், பிடிபட்டது நயினார் நாகேந்திரனுக்காக கொடுத்து அனுப்பப்பட்ட பணம் தான் என்பதில், போலீசார் உறுதியாக உள்ளனர்.

**சம்மன்**

ஆனால், அந்தப் பணத்துக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என, நயினார் நாகேந்திரன் கூறிவிட்டதால், அவரை நோக்கி எப்படி விசாரணையை கொண்டு செல்வது என புரியாமல், துவக்கத்தில் தாம்பரம் போலீசார் தவித்தனர்.

தற்போது, வழக்கு சி.பி.சி.ஐ.டி., போலீசுக்கு மாற்றப்பட்டுள்ளது. அவர்கள் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

சதீஷ், நவீன், பெருமாளிடம் விசாரித்த சி.பி.சி.ஐ.டி., போலீசார், அவர்களிடம் கிடைத்த விபரங்களை வைத்து, பா.ஜ., தொழில் பிரிவு மாநில தலைவர் கோவர்த்தனனை நோக்கி விசாரணையை கொண்டு செல்ல துவங்கியுள்ளனர். அவருக்கு சி.பி.சி.ஐ.டி., போலீசார் சம்மன் அனுப்பினர்.

ஆனால், அவருக்கு உடல் நிலை சரியில்லை என்பதால், அவரின் வீட்டுக்கு சென்று விசாரணை நடத்தினர்.

> **சென்னையில் இருக்கும் கோவர்த்தனனுக்கு சொந்தமான, கிரீன்வேஸ் சாலையில் இருக்கும் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து தான் பணம் பிரித்து அனுப்பப்பட்டது. அந்த பணிகளை கோவர்த்தனின் டிரைவர் முன்னின்று கவனித்துள்ளார்**

அப்போது, ரயிலில் பணம் கொண்டு செல்லப்பட்ட விவகாரத்தில், என்ன நடந்தது என்பது குறித்த முழு விபரங்களை கோவர்த்தனன் கூறி விட்டதாக தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து சி.பி.சி.ஐ.டி., பிரிவு போலீசார் கூறியதாவது:

முதலில் சதீஷிடம் விசாரித்தோம். அவர் நயினார் நாகேந்திரன் ஹோட்டலில் பணியாற்றிவர். அவர் இதுவரை திருநெல்வேலிக்கு சென்றதே இல்லை. பா.ஜ.,வை சேர்ந்தவர்கள் தான் அவருக்கு ரயிலில் டிக்கெட் எடுத்துக் கொடுத்து, பணத்தை கொண்டு செல்ல உத்தரவிட்டுள்ளனர்.

சென்னைவாசியான அவர், துவக்கத்தில் தயங்கினார். வற்புறுத்திய பின், நவீன், பெருமாளுடன் பணத்தை எடுத்துச் சென்றதை ஒப்புக் கொண்டார்.

**விசாரணை**

முன்னதாக, இந்த விஷயத்தில் கோவர்த்தனனும், அவரது டிரைவரும் தான் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். டில்லியில் இருந்து வந்த 200 கோடி ரூபாயை, தேர்தல் செலவுக்காக தமிழகம் முழுதும் எடுத்துச் செல்லும் பொறுப்பு, கோவையை சேர்ந்த பா.ஜ., மாநில நிர்வாகியிடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னையில் இருக்கும் கோவர்த்தனனுக்கு சொந்தமான, கிரீன்வேஸ் சாலையில் இருக்கும் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து தான் பணம் பிரித்து அனுப்பப்பட்டது. அந்த பணிகளை கோவர்த்தனின் டிரைவர் முன்னின்று கவனித்துள்ளார்.

நயினார் நாகேந்திரனுக்காக அனுப்பப்பட்ட 4 கோடி ரூபாய், கோவர்த்தனனுக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து தான் எடுத்து செல்லப்பட்டுள்ளது.

ஆனால், அதற்கு முன், கோவர்த்தனனின் டிரைவர், சென்னை யானைக்கவுனி, புளியந்தோப்பு ஆகிய இடங்களில் இருக்கும் சிலரிடம் ஒரு கோடி ரூபாயை வாங்கி, அதை டூ – வீலர் வாயிலாக எடுத்து வந்துள்ளார்.

அந்த பணத்தில் 35 லட்சம் ரூபாயை, சவுகார்பேட்டையில் இருக்கும் தனக்கு தெரிந்த மார்வாடி ஒருவரிடம் கொடுத்துள்ளார்.

அதாவது, 1 கோடி ரூபாய் வாங்கி வர கூறியதில், 65 லட்சம் ரூபாயை மட்டும், கோவர்த்தனனின் அடுக்கு மாடி குடியிருப்பு இடத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

அதை கோவர்த்தனனின் டிரைவரும், சதீஷும் தங்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளனர். இதற்காக, 'சிசிடிவி' கேமரா பதிவுகள், மொபைல் போன் அழைப்பு மற்றும் பேச்சு விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்த ஆவணங்களை காட்டிய பிறகு தான் கோவர்த்தனின் டிரைவர் மற்றும் சதீஷ் நடந்த விஷயங்களை முழுமையாக தெரிவித்தனர்.

இதற்கு பிறகு அனைத்து மட்டங்களிலும், விசாரணை நாளுக்கு நாள் தீவிரப்படுத்தப்படுகிறது. கோவர்த்தனனிடம் மீண்டும் விசாரணை நடத்தப்படும்.

அதை வைத்து, கோவை பா.ஜ., புள்ளிக்கும் சம்மன் அனுப்பப்பட்டு, அவரையும் விசாரணைக்கு அழைப்போம். அதன் பிறகே நயினார் நாகேந்திரன் விசாரணைக்கு அழைக்கப்படுவார்.

**போலி வேஷம் களையும்**

ஆதாரங்களுடன் விசாரணை நடக்கையில், பணம் கொண்டு செல்லப்பட்டதன் பின்னணியை மறைக்க முடியாது. தேவையானால், ஒன்றுக்கு மேற்பட்ட முறை விசாரணைக்காக நயினார் நாகேந்திரன் வரவேண்டியிருக்கும்.

அவரிடம் விசாரித்து முடிக்கும் போது, கிடைக்கும் விபரங்களை வைத்து மேற்கொண்டும் சிலரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டியிருக்கலாம்.

அப்படி முழுமையாக திரட்டப்படும் விபரங்களால், 200 கோடி ரூபாய் கொண்டு செல்லப்பட்ட விவகாரம் முழுதும் வெளிச்சத்துக்கு வரும். பலரது போலி வேஷம் களையும்.

தி.மு.க., ஆட்சி மேலிடத்தில் இருப்பவர்களே, இந்த விஷயத்தில் என்ன நடந்தது என்பதை அறிய ஆர்வம் காட்டுவதால், விசாரணை தீவிரமாக நடக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

News regarding 4 crore seized at Tambaram Railway station

தினமணி

1- 7 MAY 2024

# அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் ஆய்வு

சென்னை, மே 6: வாக்கு எண்ணும் மையங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

நீலகிரி, ஈரோடு உள்பட ஒருசில தொகுதிகளில் ஏற்பட்ட பிரச்னையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் விளக்கம் அளித்தார். மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு சத்யபிரத சாகு திங்கள்கிழமை அளித்த பேட்டி:

வாக்கு எண்ணிக்கை தினத்தன்று நியமிக்கப்பட வேண்டிய முகவர்கள், அவர்களுக்கான தகுதிகள் குறித்த விவரங்கள் அடங்கிய கடிதத்தை ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அதிகாரியும் தங்களுக்கு உட்பட்ட தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு அனுப்பி வருகிறார்கள். வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அதிகாரிகள், அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மே 20-ஆம் தேதி முதல் தொடங்கும்.

நீலகிரி, ஈரோடு போன்ற மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணும் மையங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் ஒரு சிலவற்றில் பிரச்னை எழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த கேமராக்கள் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பொருத்தப்பட்டுள்ளன.

## தலைமைத் தேர்தல் அதிகாரி



அவற்றுக்கான மின் இணைப்பு, மின் சாதனங்கள் போன்றவை வெளியில் இருந்து எடுத்து வரப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. எனவே, மின்கசிவு, மின் இணைப்பில் பிரச்னை போன்ற காரணங்களாலேயே கண்காணிப்பு கேமராக்கள் சிறிது நேரம் செயல்படாத நிலை ஏற்பட்டது. அப்படி ஏற்பட்டவுடன் அவை சரிசெய்யப்பட்டுள்ளன.

இதுபோன்ற பிரச்னைகள் வேறெந்த மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணும் மையங்களிலும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு அனைத்து மையங்களிலும் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் முழுமையாக ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் பொதுப்பணித் துறை, மின்வாரியத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் இந்தப் பணியை முடித்துள்ளனர். கண்காணிப்பு கேமராக்களுக்கு போதிய அளவு மின்சாரமும், மின் இணைப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், மின் தடை உருவானால் மாற்று ஏற்பாடுகளும் தயாராக உள்ளன.

**சான்றிதழ்கள் வழங்குதல்:** பொதுத் தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், மாணவர்களுக்குத் தேவையான சான்றிதழ்களை வருவாய்த் துறை அதிகாரிகள் வழங்க நடத்தை விதிகள் எந்த வகையிலும் தடையாக இல்லை. எனவே, மாணவர்களுக்குத் தேவையான சான்றிதழ் உள்பட வருவாய்த் துறை தொடர்பான அனைத்து சான்றுகளையும் வழக்கம்போல் அளிக்கலாம்.

ஏற்காடு சாலை விபத்து, விருதுநகர் வெடி சம்பவம் ஆகியவற்றில் இறந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் அவசியம்.

எனவே, தமிழக அரசின் சார்பில் அளிக்கப்பட்ட கோப்புகள் அனைத்தும் தில்லியில் உள்ள தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆணையத்தின் பதில் கிடைத்தவுடன், தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்படும் என்றார் அவர்.

CEO, TN informs that A Special team to cross check cctv camera & Take action to working of cctv without any interruption

தினமணி
7 MAY 2024

# சமூக ஊடகங்களில் போலி தகவல்: கட்சிகள் நீக்க தேர்தல் ஆணையம் கெடு

புது தில்லி, மே 6: அரசியல் கட்சிகளின் சமூக ஊடக கணக்குகளில் போலி தகவல் பதிவிடப்பட்டால், அவர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட 3 மணிநேரத்துக்குள் அத்தகவலை நீக்கிவிட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கெடு விதித்து உத்தரவிட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், சமூக ஊடகங்களில் போலி விடியோக்கள், தகவல்கள் பதிவிடுவது முக்கிய பிரச்னையாக எழுந்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, பாலிவுட் நடிகர்கள் அமீர் கான், ரன்வீர் சிங் ஆகியோர் தொடர்பான போலி சித்தரிப்பு (டீப் ஃபேக்) விடியோக்கள் அண்மையில் சில சமூக ஊடக கணக்குகளில் பதிவிடப்பட்டன. இது தொடர்பாக குற்றவியல் வழக்குகள் பதிவான நிலையில், சமூக ஊடகங்களை பொறுப்புடனும், நெறிமுறையுடனும் பயன்படுத்துவது குறித்து அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் திங்கள்கிழமை பிறப்பித்த உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:

தேர்தல் பிரசாரத்துக்காக அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும்போது, நடத்தை விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம்.

அனைத்து தரப்பினருக்கும் சமநிலையான போட்டிக் களத்தை உறுதிசெய்ய சமூக ஊடகங்களைப் பொறுப்புடனும் நெறிமுறையுடனும் பயன்படுத்த வேண்டும். எந்தவொரு நபர் அல்லது அவரது பதவியை உருவகப்படுத்தி, அரசியல் கட்சிகள் போலி சித்தரிப்பு விடியோக்களை பதிவிடவோ அல்லது பரப்பவோ கூடாது.

தகவல்களை திரித்தல் அல்லது பொய் தகவல்களைப் பரப்புவதற்காக போலி சித்தரிப்புகளை உருவாக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தக் கூடாது. மக்களை தவறாக வழிநடத்தும் தகவல்கள், பெண்களை இழிவுபடுத்தும் உள்ளடக்கங்களைப் பதிவிடக் கூடாது.

கட்சிகளின் சமூக ஊடக கணக்குகளில் இதுபோன்ற உள்ளடக்கங்கள் பதிவிடப்பட்டால், அதுகுறித்து அவர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட 3 மணி நேரத்துக்குள் நீக்கிவிட வேண்டும். அத்தகைய உள்ளடக்கம் பதிவிடப்பட்டதற்கு கட்சியில் பொறுப்பான நபரை அடையாளம் கண்டு, அவரை எச்சரிக்க வேண்டும்.

சட்டவிரோத தகவல்கள் மற்றும் போலி பயனர்கள் தொடர்பாக தகவல் தொழில்நுட்ப சட்ட விதி 3ஏ-இன்கீழ் சம்பந்தப்பட்ட தளங்களில் புகார் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**புதிய வசதி அறிமுகம்:** மக்களவை இருகட்ட தேர்தல்களில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகாரபூர்வமாக வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதை முன்வைத்து, தேர்தல் ஆணையம் மீது எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இந்நிலையில், வாக்குப்பதிவு விவரங்களை விரைந்து வெளியிடுவதற்கான பிரத்யேக செயலியில் புதிய வசதியை தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, வாக்குப் பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணிநேரத்துக்கு ஒருமுறை விவரங்கள் புதுப்பிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ECI given a Dead line to remove fake political rumours from Social media.

தினமணி
7 MAY 2024

# வாக்கு எண்ணும் மையங்களில் முன்னேற்பாடுகள் தயார்

சென்னை, மே 6: சென்னையில் வாக்கு எண்ணும் மையங்களில் முன்னேற்பாடுகள் தயார்நிலையில் இருப்பதாக சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆணையருமான ஜெ. ராதாகிருஷ்ணன் கூறினார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியது:

வாக்கு எண்ணும் மையங்களில் முன்னேற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 334 நுண் பார்வையாளர்கள், 318 கண்காணிப்பாளர்கள், 325 உதவியாளர்கள், 269 அலுவலக உதவியாளர்கள் என 1,246 பணியாளர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ளனர். வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை மக்களவைத் தொகுதிகளுக்குட்பட்ட தலா 6 சட்டப்பேரவை தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கைக்காக முறையே 84, 100, 84 மேஜைகள் என மொத்தம் 268 மேஜைகள் பயன்படுத்தப்பட உள்ளன.

வாக்கு எண்ணிக்கையில் பணிபுரியவுள்ள பணியாளர்களை கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மே 28 ஆம் தேதி முதல் பயிற்சி வழங்கப்படும். இரண்டாம் கட்ட பயிற்சி ஜூன் 3, 3-ஆம் கட்ட பயிற்சி வாக்கு எண்ணிக்கை நாளான ஜூன் 4-ஆம் தேதி காலை 5 மணியளவில் வழங்கப்படும்.



ஜெ.ராதாகிருஷ்ணன்

**கண்காணிப்பு கேமராக்கள்:** வாக்கு எண்ணிக்கை மையங்களான லயோலா கல்லூரியில் 198, ராணி மேரி கல்லூரியில் 176, அண்ணா பல்கலைக்கழகத்தில் 210 கண்காணிப்புக் கேமராக்கள் என மொத்தம் 584 கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

## வாகன ஓட்டிகளுக்காக நிழல் பந்தல்கள்

இருசக்கர வாகனங்களில் செல்வோரை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் போக்குவரத்து சிக்னல் பகுதிகளில் நிழல் பந்தல்கள்அமைக்கப்பட உள்ளன என்று ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். அதன் விவரம்:

| போக்குவரத்து மண்டலம் | சிக்னல் பகுதி |
|---|---|
| ராயபுரம் | ராஜா முத்தையா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை சந்திப்பு |
| அண்ணா நகர் | 2–ஆவது அவென்யு, திருமங்கலம் ரவுண்டானா சிக்னல், நியூ ஆவடி சாலை, கீழ்ப்பாக்கம் 3–ஆவது அவென்யு சந்திப்பு. |
| தேனாம்பேட்டை | வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம் – சேத்துப்பட்டு சிக்னல் |
| அடையாறு | எல்.பி. சாலை, மேற்கு அவென்யு சாலை சந்திப்பு, திருவான்மியூர், ஓ.எம்.ஆர். |

Chennai DEO informs that counting centers are ready for the Counting works.

தினகரன்
F 7 MAY 2024

# சமூக ஊடகங்களில் போலி வீடியோக்களை அகற்ற 3 மணி நேர கெடு தேர்தல் கமிஷன் அதிரடி

புதுடெல்லி,மே7; சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ள போலி வீடியோக்களை அரசியல் கட்சிகள் அகற்ற தேர்தல் கமிஷன் 3 மணி நேர கெடு விதித்தது.

மக்களவை தேர்தலை முன்னிட்டு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, நடிகர்கள் அமீர்கான், ரன்வீர் சிங் ஆகியோர் உள்பட சிலரை விமர்சனம் செய்து சமூக வலைதளங்களில் பதிவிட்ட டீப்பேக் வீடியோக்கள் குறித்து தேர்தல் கமிஷனில் பல்வேறு தரப்பில் இருந்தும் புகார்கள் அளிக்கப்பட்டன. இந்த புகாரை பரிசீலித்த தேர்தல் ஆணையம் இந்த வீடியோக்களை அரசியல் கட்சிகள் சமூக ஊடகங்களில் இருந்து 3 மணி நேரத்தில் அகற்ற கெடு விதித்து உத்தரவிட்டது.

ECI given a Dead line to remove fake political rumors from Social media.

தினகரன்
7 MAY 2024

தமிழ்நாட்டில் 39 வாக்கு எண்ணும் மையங்களிலும்

# கேமராக்கள் தடையின்றி வேலை செய்ய சிறப்பு ஏற்பாடு

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மே 7: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு சென்னை, தலைமை செயலகத்தில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை ஜூன் 4ம் தேதி நடைபெற உள்ள நிலையில், வாக்கு எண்ணிக்கை மையங்களில் அனுமதிக்கப்படக்கூடிய நபர்கள் எண்ணிக்கை, வாக்கு எண்ணிக்கையில் ஈடுபட உள்ள பணியாளர்களுக்கான பயிற்சிகள் உள்ளிட்ட முன்னேற்பாடுகள் தொடர்பான பணிகள் 20ம் தேதிக்கு பிறகு மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகளில் பதிவான வாக்கு இயந்திரங்கள் 39 மையங்களில் 24 மணி நேரமும் துணை ராணுவம், சிறப்பு போலீஸ் என மூன்றடுக்கு பாதுகாப்புடன் கண்காணிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஊட்டி, தென்காசி உள்ளிட்ட சில வாக்கு எண்ணிக்கை மையங்களில் சிசிடிவி கேமராக்கள் பழுது தொடர்பாக புகார்கள் வந்தது. இதுதொடர்பாக அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்து வாக்கு எண்ணிக்கை மையங்களில் பொதுப்பணித்துறை பொறியாளர்கள், மின்வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அதிக வெப்பத்தாலும், மின் இணைப்பு பிரச்னைகளாலும் கண்காணிப்பு கேமராக்கள் பழுதாக கூடாது என்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தின் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் தடைபட்டாலும், வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள கேமராக்கள் வேலை செய்யும் வகையில் ஜெனரேட்டர்கள் வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



விக்கிரவாண்டி இடைத்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் இருந்து இதுவரை எந்த தகவலும் வரவில்லை. பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியாகி உள்ள நிலையில் சான்றிதழ் வழங்கும் பணியில் எவ்வித தொய்வும் இருக்கக் கூடாது என்று அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரி உள்ளார்கள். அந்த விவரங்கள் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

A Special Team to cross check cctv camera & take action to work without any interruption.